**26.08.2021**

**அ.வ.எண்.194/2015**

**குறுக்கு விசாரணை தொடர்ச்சி வா.சா.1 (1ம் பிரதிவாதி தரப்பில்)**

இவ்வழக்கு என்ன பரிகாரம் கோரி தாக்கல் செய்துள்ளேன் என்றால் கிரயம் செய்வதற்கு அக்ரிமெண்ட் செய்தேன். பின்பு பதிவு செய்யவில்லை. அங்கு உள்ள குடிசைகளை காலி செய்வதற்காக வழக்கு தொடர்ந்தேன். ஆனால் அங்க தற்போது குடிசை இல்லை. பின்பு சொத்திற்கு வில்லங்கம் செய்து பார்த்ததில் ராதா என்பவர் அவர்களது மகன்களான வசந்தகுமார், அஜித்குமார் ஆகியோர் பெயரில் தாவா சொத்தினை பதிவு செய்துள்ளார்கள். ஆகையால் இவ்வழக்கினை தொடர்ந்துள்ளேன். கிரயஒப்பந்த பத்திரத்தின் படி ஏற்றுதலை ஆற்றுதல் பரிகாரம் கோரி வழக்கு தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான். ஆகையபடியால் என் பிரமாண வாக்குமூலத்தில் ஏற்றுதலை ஆற்றுதல் பரிகாரம் கோரி இவ்வழக்கு தாக்கல் செய்யபட்டுள்ளதாக குறிப்பிடப்பட்டுள்ளது பொய் என்றால் சரியல்ல. வழக்கு தாவா சொத்தின் பழைய சர்வே எண் 1194/1பி, 1194/2 என்றால் சரிதான். இவ்வழக்கு தாவா சொத்தின் டவுன் சர்வே எண் 4 என்றால் சரிதான். இவ்வழக்கு ஆரம்பத்தில் சர்வே எண் 1194/1பி, 1194/2 ன் மொத்த விஸ்தீரணம் 23

செண்டில் நான் 7 செண்டு நிலத்திற்கு மட்டும் தான் இவ்வழக்கினை தொடர்ந்துள்ளேன் என்றால் சரிதான். இவ்ழக்கில் தாவா சொத்தினை மொத்த விஸ்தீரணம் 15 செண்டு என்று குறிப்பிட்டு அதில் 7 செண்டு தாவா சொத்து என்று திருத்தம் செய்யபட்டுள்ளது என்றால் சரிதான். எதற்காக 23 செண்டு என்பதை 15 செண்டு என்று மாற்றம் செய்துள்ளேன் என்றால் தாவா சொத்தில் 8 செண்டு நிலத்தை கன்னியப்பன் என்பவருக்கு நான் கொடுத்துவிட்டேன். ஆகையால் திருத்தம் செய்தேன். கன்னியப்பன் என்பவருக்கு எப்போது நான் கிரயம் கொடுத்தேன் என்றால் எனக்கு தற்போது ஞாபகம் இல்லை. சுமார் எத்தனை வருடம் இருக்கும் என்றால் ஞாபகம் இல்லை. எனக்கு எழுத படிக்க தெரியுமா என்றால் தெரியும். வா.சா.ஆ.10ன் படி கன்னியப்பன் என்பவருக்கு 11.6.2010ம் தேதி கிரயம் கொடுத்துள்ளேன் என்றால் சரிதான். இவ்வழக்கினை நான் 2015ம் வருடத்தில் தான் தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரிதான். இவ்வழக்கின் 1ம் பிரதிவாதிகளுக்கு வாய்மொழியாக 1989ம் வருடம் தாவா சொத்தினை கிரயம் கொடுத்துவிட்டு தற்போது அவர் மீது இவ்வழக்கினை தொடாந்துள்ளேன் என்றால் சரியல்ல. நான் அவ்வாறு கொடுக்கவில்லை. தாவா சொத்தின் ஜக்குபந்தி தெரியுமா என்றால் தெரியும். வடக்கு பக்கத்தில் கன்னியப்பனுக்கு கொடுத்த இடம், தெற்கு

பக்கத்தில் எங்களது மிகுதி மனை, கிழக்கு பக்கத்தில் போரூர் முதலியார் நிலம், மேற்கு பக்கம் ரோடு ஆகும். தெற்கு பக்கம் மிகுதியான நிலம் என்று கூறப்படும் இடத்தில் வீடு உள்ளதா என்றால் என்னுடைய வீடு உள்ளது. அங்கு உள்ளதாக கூறப்படும் வீடு யார் கட்டிய வீடு என்றால் நான் கட்டிய வீடு ஆகும். இவ்வழக்கில் நீதிமன்ற ஆணையர் நியமணம் செய்யபட்டு தெற்கு பக்கத்தில் உள்ள இடத்தில் உள்ள வீட்டினை யார் கட்டியது என்ற விவரத்தை தெரிந்து கொள்ளலாம் என்றால் சரிதான். நான் ஏற்கனவே கன்னியப்பன் என்பவருக்கு 23 செண்டு நிலத்தில் 8 செண்டினை 2010ம் வருடம், விற்றுவிட்டு பின்பு இவ்வழக்கினை 23 செண்டு நிலத்திற்கு தொடர்ந்துள்ளேன். பின்பு மொத்த விஸ்தீரணம் 15 செண்டு நிலமாக திருத்தம் செய்துள்ளேன். அதே போல் இவ்வழக்கின் 1ம் பிரதிவாதிக்கு 1989ல் தாவா சொத்தினை விற்பனை செய்துவிட்டு தற்போது இவ்வழக்கினை தொடர்ந்துள்ளேன் என்றால் சரியல்ல. வழக்கு தாவா சொத்திற்கு தெற்கு பக்கத்தில் உள்ள மிகுதி நிலத்தின் சர்வே எண் தெரியுமா என்றால் 1194/2 ஆகும். வா.சா.ஆ.6 ஆவணம் 28.8.2010ம் தேதியிட்ட வழக்கறிஞர் அறிவிப்பு மற்றும் 14.5.2015ம் தேதியிட்ட வழக்கறிஞர் அறிவிப்பு அத்துடன் அஞ்சலக ஒப்புதல் அட்டையும் உள்ளது என்றால் சரிதான்.

அந்த இரண்டு அறிவிப்பும் எனது வழக்கறிஞரிடம் நான் கூறி பிரதிவாதிக்கு அனுப்பபட்ட அறிவிப்புகள் என்றால் சரிதான். அறிவிப்புகளில் உள்ள கையொப்பம் என்னுடையது தான். வழக்கறிஞர் வேண்டுகோளின் படி குறுக்கு விசாரணை சாட்சியம் ஒத்திவைக்கபடுகிறது.